### பிப்ரவரி–11 திருவிடந்தையில் நடைபெற உள்ள “என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி” மண்டல மாநாட்டில்

# 1.5 லட்சம் வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்கும் வகையில் பிரம்மாண்ட ஏற்பாடுகள்!

## சட்டமன்றத் தேர்தலின் முதல் தேர்தல் பரப்புரையாக அமைந்து வரலாறு படைக்கும் – மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. பெருமிதம்!

காஞ்சிபுரம்,பிப்.7-

வருகிற பிப்ரவரி 11-ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருவிடந்தையில் நடைபெறும் சென்னை - விழுப்புரம் மண்டல “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” மாபெரும் மாநாட்டில் 1 ½ லட்சம் BLA-2, BLC, BDA, BYO வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்கும் வகையில் பிரம்மாண்ட கோலாகல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மாநாட்டில் கழகத்தலைவர் - முதல்வர் அவர்கள் பங்கேற்று எழுச்சி உரையாற்றுவது, சட்டமன்றத் தேர்தலின் முதல் தேர்தல் பரப்புரையாக அமைந்து வரலாறு படைக்கும் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் - சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா பெருமிதத்துடன் உணர்ச்சி பொங்க கூறியுள்ளார்.



சென்னை - விழுப்புரம் மண்டலத்தில் அடங்கியுள்ள மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருவிடந்தையில் கழக துணைப் பொதுச்செயலாளர் - சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழுப்புரம் மண்டல பொறுப்பாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார்,

தொடக்கத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அனைவரையும் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு, ஆவடி நாசர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் சுதர்சனம், க.சுந்தர், ஆர்.டி.சேகர், மயிலை த,வேலு, நே.சிற்றரசு, எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், பொன்.கவுதமசிகாமணி, ஆர்.லட்சுமணன் ஆகியோர் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், கழக சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.இதயவர்மன், தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எஸ்.எம்.கே. அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன் மற்றும் கழகத்தினர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இக்கலந்தாலோசனைக் கூட்டத்தில் பிப்ரவரி 11-ஆம் தேதி அன்று நடைபெற உள்ள மண்டல மாநாட்டை வெற்றிகரமாக எப்படி நடத்துவது என்றும், சென்னை - விழுப்புரம் மண்டலத்தில் உள்ள 15 கழக மாவட்டத்தில் உள்ள 49 சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து 1 ½ லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்களை முறையாக எப்படி அழைத்து வருவது என்பது குறித்தும், விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது.

பின்னர், இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் மாநாட்டு மேடை - திடல் அமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

அதன்பிறகு சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா இம்மாநாடு ஏற்பாடுகள் குறித்து நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி:-

சென்னை - விழுப்புரம் மண்டலத்தில் உள்ள 49 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள BLA -2, BLC, BDA, BYO ஆகிய வாக்குச்சாவடி குழுவினர் சந்திப்பு - “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” மாபெரும் மாநாடு வருகிற 11.2.2026 புதன்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ECR சாலையில் கோவளம் அருகில் அமைந்துள்ள திருவிடந்தையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திடலில் மிகவும் பிரமாண்டமாக நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மிகவும் எழுச்சியுடன் கோலாகலமாக நடைபெறவுள்ள இம்மாநாட்டில் 15 கழக மாவட்டத்தில் உள்ள 49 சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து 1 ½ லட்சத்துக்கும் மேற்பட்ட BLA -2, வாக்குச்சாவடி நிலைமுகவர்கள், BLC- வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், BYO - வாக்குச்சாவடி இளைஞர் அணி அமைப்பாளர்கள், BDA - வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப அணி முகவர்கள் உள்ளிட்ட வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்க உள்ளனர்.

கடந்த ஓராண்டாக நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத் தேர்தல் பணிகளைத் தொடங்கி, இந்தியாவில் எந்த ஒரு அரசியல் கட்சியும் இதுவரை செய்யாத வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் BLA -2, BLC, BDA, BYO ஆகிய வாக்குச்சாவடி குழுவினரை அமைத்து தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தி உள்ளார்.

சென்னை - விழுப்புரம் மண்டலத்தில் உள்ள 49 சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள 1 ½ லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி குழுவினர் ஒருங்கிணைந்து பங்கேற்கும் வகையில் “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” முதல் மண்டல மாநாடு வருகிற 11-ஆம் தேதி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருவிடந்தையில் நடைபெற உள்ளது.

இம்மண்டல மாநாட்டை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் முன்னின்று நடத்துகிறார். இம்மாநாடு சுமார் 10 லட்சம் சதுர அடி பரப்பளவில் மிக பிரம்மாண்டமாக நடைபெற கோலாகலமான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

நம்முடைய ஒப்பற்றத் தலைவர் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் நம்முடைய பாசத்துக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இம்மாபெரும் மண்டல மாநாட்டில் பங்கேற்று வாக்குச்சாவடி குழுவினருக்கு புத்துணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் எழுச்சியுரை ஆற்றுகிறார்.

திருவிடந்தையில் நடைபெறும் இம்மாநாடு வருகிற சட்டமன்றத் தேர்தலின் முதல் தேர்தல் பரப்புரையாக - வெற்றி மாநாடாக அமைந்து சரித்திரம் படைக்கும். சட்டமன்றத் தேர்தலில் தி.மு.காவுக்கு கிடைக்கும் இமாலய வெற்றிக்கு அச்சாரமாக அமையும்.

மாற்றுக் கட்சியினரும் மிரண்டு போகும் வகையில், வருகிற 2026- ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தி.மு.க தான் ஆட்சிக்கு வரும் என மக்கள் அனைவரும் எண்ணும் அளவிற்கு இந்த மாநாடு சரித்திர சாதனையை படைக்கும்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. கூறியுள்ளார்.





சேலம் மத்திய மாவட்டத்தில் தமிழ்நாடு தலைகுனியாது சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி பரப்புரையில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர். தயாநிதி மாறன் கலந்து கொண்டு பேசினார். மற்றும் மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா. இராஜேந்திரன் மாவட்ட பொருளாளர். மு.கார்த்திகேயன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், தாமரைக் கண்ணன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்கள். எஸ்.ஆர். பார்த்திபன், பி.கே.பாபு, தேர்தல் பார்வையாளர். ராஜசேகர், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர். டாக்டர். ஏ. கே. தருண், ஒன்றிய செயலாளர்கள் ரெயின்போ நடராஜன், செல்வ குமரன், கே.சி.அறிவழகன் ஓ. எம். ரமேஷ், ரவிச்சந்திரன் பாலசுப்பிரமணி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 5 ஆண்டுகளாக ‘ஆராய்ச்சி’ நிலையிலேயே இருக்கும் ஒன்றிய அரசின் நதிகள் பாதுகாப்பு திட்டம்!

## தமிழ்நாட்டு நதிகள் உட்பட 95% நதிகள் புறக்கணிப்பு என கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!

புதுடெல்லி, பிப்.7–

இந்திய நதிகளைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக் கப்பட்ட முக்கிய திட்டமான தேசிய நதி ஆராய்ச்சி மையத்தின் (National Centre for River Research NCRR) செயல்பாடுகள் குறித்து, நாடாளுமன்றத்தில் ஜல்சக்தி அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு கிடைத்துள்ள பதில்கள், இந்திய நதிகளைப் பாதுகாப்பதில் ஒன்றிய அரசுக்கு இருக்கும் முழுமையான அக்கறையின்மையையும், தமிழ்நாட்டு நதிகளின் மீதான அப்பட்டமான பாராமுகத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.



1. முடிவே இல்லாமல் தொடரும் ‘ஆராய்ச்சி’ படலம்:

ஒன்றிய அரசு தனது பதிலில், NCRR அமைப்பு இன்னும் ‘ஆராய்ச்சி (Project Mode)’ நிலையிலேயே இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த அமைப்பு 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டதே, அதன் ஆய்வறிக்கைகளை வைத்து நதிகளைப் பாதுகாப்பதற்கான வலுவான நாடு தழுவிய கொள்கைகளை உருவாக்குவதற்காகத் தான். ஆனால், இத்தனை நாட்களாகியும் ஒரு கொள்கையைக் கூட ஒன்றிய அரசு உருவாக்காமல் இருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

2. நதிகள் அப்பட்டமாகப் புறக்கணிப்பு:

ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலின் படி, தற்போது கங்கைப் படுகையில் 9 நதிகள் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் 7 நதிகள் என வெறும் 16 நதிகள் மட்டுமே ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

உண்மை நிலை என்னவென்றால், 2025ம் ஆண்டு ஒன்றிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அளித்த தரவின்படி, நாடு முழுக்க 296 நதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 5% நதிகள் மட்டுமே இதுவரை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இது அதிர்ச்சியளிக்கக் கூடிய அவலமான செயல்.

3. தமிழ்நாடு அரசின் முன்னுதாரணமான நதிகள் மீட்பு செயல்பாடுகள்:

நதிகள் மீட்பில் பெரும்பான்மை அதிகாரத்தையும் நிதி ஆதாரத்தையும் வைத்துக்கொண்டு ஒன்றிய அரசு தவழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், தமிழ்நாடு அரசு வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

‘நடந்தாய் வாழி காவேரி’ திட்டத்திற்கு, ஒன்றிய அரசிடம் இருந்து 60% நிதி நிலுவையில் இருக்கும் போதிலும், தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியில் இருந்து பணம் ஒதுக்கி, பணிகளை முடுக்கி விட்டுள்ளது. அடுத்ததாக, அடையாறு கூவம் மீட்பு பணிகளும் பலகட்டங்களாக நடந்து வருகின்றன.

மேற்கொண்டும், வைகை புனரமைப்பு, தாமிரபரணி புனரமைப்பு என, தமிழ்நாடு முழுக்க நீர் ஆதாரங்களைப் பேணிக்காக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஒன்றிய அரசு தனது மழுப்பலான பதில்களை நிறுத்திக் கொண்டு, தேசிய நதி ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகளை முடுக்கிவிட்டு, விரிவான, வலுவான தேசிய நதி மீட்பு திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் தமிழ்நாட்டு நதிகளை பாரபட்சக் கண்ணோடு புறக்கணிக்காமல், நிதி ஒத்துழைப்பையும் முறையாக வழங்கி, தமிழ்நாடு அரசுக்கு துணைநிற்க வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.


